**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தாராபுரம்,**
**முன்னிலை : திரு. R.பாண்டி மகாராஜா B.Sc.,B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, தாராபுரம்**
2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 06–ம் நாள் வியாழக்கிழமை
**இ.ம.எண்.6/2025 in அ.வ.எண்.392/2015**

K.S.கோவிந்தராஜ் ...மனுதாரர்/பிரதிவாதி

..எதிராக..

K.துரைசாமி .... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது 30.10.2025 அன்று இறுதியாக என் முன்னர் விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் திரு.S.T.சேகர் B.Sc.,LL.B., வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு.R.சுப்பிரமணியன் B.Com.,LL.B., வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், மனு எதிருரை ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

" **உத்தரவு**"

இந்த மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கட்டளை XXVI, விதி 9 மற்றும் பிரிவு 151–ன் கீழ் மனுச் சொத்தினை பார்வையிட்டு நிலஅளவையர் மூலம் அளவீடு செய்து தாவா தடத்தின் அத்தை நிர்ணயம் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்**

இந்த மனுவில் எதிர்மனுதாரர்/வாதியின் பூமியான ரீ.ச.266/3–க்கு தென்புறத்தில் கிழமேலில் பைபாஸ் ரோடு உள்ளது. மேற்படி ரோட்டிலிருந்து மனுதாரரின் பூமியான ரீசர்வே எண்.266/3–க்கு செல்வதற்கு வாதியின் பூமியான ரீசர்வே எண்.266/3–ல் உள்ள 77–1/2 செண்ட் இடத்தில் கிழகோட்டில் தென்வடலில் செல்லும் 20 அடி அகல பாதையின் வழியாக தான் செல்ல முடியும். மேற்படி 20 அடி அகல தடத்தினை தவிர வேறு தடம் எதுவும் இல்லை. மேற்படி

PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2025.11.06 16:51:15 +0530

தடத்தினை தான் மனுதாரர் அவரது முன்பாத்தியஸ்தர்கள் காலத்திலிருந்து அனுபவித்து வரும் நிலையில் மேற்படி தடம் குறித்து வாதி மற்றும் வாதியின் முன்பாத்தியஸ்தரின் கிரைய ஆவணத்திலும், மேற்படி 20 அடி அகல தடம் தெளிவாக கண்டெழுதப்பட்டுள்ளது. இந்நிலையில், மனுதாரருக்கு எந்த ஒரு அறிவிப்பும் கொடுக்காமல் ஆணையர் நியமித்து மனுச் சொத்திற்கு அழைத்து சென்று காட்டியுள்ளார்கள். எதிர்மனுதாரர்/வாதி உண்மையான தடத்தினை மறைத்து வேண்டுமென்றே தடம் இல்லையென்று பொய்யாக சொல்லி மனுதாரருக்கு பாத்தியப்பட்ட தடத்தினை ஆக்கிரமிப்பு செய்து, மனுச் சொத்தில் தடம் நிலையில் இல்லையென்று ஆணையரை அழைத்து சென்று காட்டியுள்ளார்கள். எதிர்மனுதாரர்/வாதியின் பூமியில் கிழகோட்டில் மேற்படி 20 அடி அகல தென்வடல் தடம் உள்ளது என்பதை மனுதாரர் தரப்பில் இந்நீதிமன்றத்திற்கு நிரூபணம் செய்ய தாவா சொத்தை அளவீடு செய்து தடத்தின் அத்தினை நிர்ணயம் செய்ய வேண்டி இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:-**

இந்த எதிருரையில், இந்த வழக்கு வாதியும், இம்மனுவின் எதிர்மனுதாரரும் ஆனவர் வழக்கு தொடரும் போது இ.ம.எண்.1154/2015-ல் ஆணையர் நியமனம் செய்யப்பட்டு, ஆணையர் பார்வையிட்டு, அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்யப்பட்டு உள்ளது. மேற்படி ஆணையர் மனுவில் ஆட்சேபணை எதுவும் தாக்கல் செய்யப்படாத நிலையில், அந்த மனுவானது 18.12.2015-ல் Closed ஆகி உள்ளது. இதன் பின் வழக்கு விசாரணையில் வந்ததில், பிரதிவாதி தரப்பில் சாட்சியம் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிலையில் மறுமுறை பார்வையிட்ட பின் இப்போது நில அளவையர் நியமனம் கேட்டுள்ளது சரியான நிலைப்பாடு அல்ல. ஏற்கனவே,

PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2025.11.06 16:51:20 +0530

மனுதாரர்/பிரதிவாதி ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபணை செய்யாததில், இப்போது, நிலஅளவையர் நியமனம் கோரி உள்ளது சரியல்ல. எனவே, இம்மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டி பிரார்த்திக்கப்படுகிறது.

3. இருதரப்பும் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் எவ்வித சாட்சிய சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை. வழக்கு கோப்புகள் பரிசீலனை செய்யப்பட்டன.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர்கள் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கக்கூடியதா?

<u>5. தீர்வு:–</u>

5.1. இதன் அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிலைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த எதிர்மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், இதன் அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.1154/2015–ல் நியமிக்கப்பட்ட ஆணையரால் அறிக்கை மற்றும் வரைபடம் ஆகியவைகள் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், அந்த மனுவானது 18.12.2015–ல் முடிக்கப்பட்டுள்ளது. மேலும், அந்த ஆணையரின் அறிக்கைக்கு இந்த மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எந்தவொரு ஆட்சேபணையும் தாக்கல் செய்யப்படவில்லை.

5.2. மேலும், இதன் அசல் வழக்கில் இந்த மனுதாரர்/பிரதிவாதியால் 02.06.2016–ம் தேதியன்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து, இதன் அசல் வழக்கில் விசாரணையானது 14.07.2022–ம் தேதியன்று ஆரம்பிக்கப்பட்ட நிலையில் 17.10.2023–ம் தேதியன்று பிரதிவாதி தரப்பில் இந்த மனுதாரர் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். மேலும், வழக்கறிஞர் ஆணையரின்

PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2025.11.06 16:51:25 +0530

அறிக்கை மற்றும் வரைபடம் ஆகியவைகள் இதன் அசல் வழக்கில், இந்த மனுதாரர்/பிரதிவாதி பி.வா.சா.1–ன் மூலம் 10.01.2024–ம் தேதியன்று குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5.3. மேலும், இதன் அசல் வழக்கானது 23.02.2024–ம் தேதி முதல் வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில், இந்த மனுதாரர்/பிரதிவாதியால் இ.ம.எண்.5/2024 in இ.ம.எண்.1154/2015 in அ.வ.எண்.392/2015 ஆக நீதிமன்ற ஆணையருக்கு மீண்டும் வழக்கு சொத்தினை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவில் 04.09.2024–ம் தேதியன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில், இந்த மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் அந்த மனுவானது "Not pressed" செய்யப்பட்டதால் 28.03.2025–ம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்த மனுதாரர்/பிரதிவாதியால் 28.03.2025–ம் தேதியில் இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5.4. இந்நிலையில், இந்த மனுவில் மேலலே விவாதிக்கப்பட்டதன் அடிப்படையில் பார்க்கும்பொழுது, இதன் அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/வாதியால் விளம்புகை மற்றும் நிலைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், இந்த மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவில் கோரியுள்ள தடம் குறித்த அத்தினை நிலஅளவையர் மூலம் அளந்து நிர்ணயம் செய்வதற்காக ஆணையர் நியமனம் கோரியுள்ளது இந்த வழக்கின் தீர்மானிப்பிற்கு எந்த வகையிலும் உதவியாக அமைவதாக இல்லை. மேலும், இதன் அசல் வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையினை சுமார் 10 வருடங்களாக ஆட்சேபணை செய்யாத நிலையிலும், அந்த நீதிமன்ற ஆணையரின் அறிக்கையினை இந்த மனுதாரர்/பிரதிவாதி மூலம்



PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2025.11.06 16:51:30 +0530

நீ.ம.சா.ஆ.1 மற்றும் நீ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள நிலையிலும், தற்போது அந்த ஆணையர் அறிக்கையானது ஏற்றுக் கொள்ளப்பட்டு வழக்கின் விசாரணை முடிவுற்ற நிலையில் மீண்டும் நீதிமன்ற ஆணையர் நியமனம் கோருவது எந்த வகையிலும் ஏற்புடையதாக அமையவில்லை. மேலும், இதன் அசல் வழக்கில் மனுதாரர்/பிரதிவாதி எடுத்துரைத்துள்ள தடத்தினை பொறுத்து எந்தவொரு எழுவினாவும் இதன் அசல் வழக்கில் இடம் பெறாத நிலையில் இந்த மனுவில் கோரியுள்ள நீதிமன்ற ஆணையர் நியமனம் என்பது இந்த வழக்கிற்கு எந்த வகையிலும் தொடர்புடையதாக அமையவில்லை.

5.5. மேலும், அசல் வழக்குகளில் நீதிமன்ற ஆணையரால் வழக்கு சொத்தின் அமைப்பு நிலை குறித்து அறிக்கையானது தாக்கல் செய்யப்பட்ட பிறகு அந்த நீதிமன்ற ஆணையரின் அறிக்கையினை சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் ஆட்சேபணை செய்வதற்கு தரப்பினர்களுக்கு உரிமையுள்ளது. மேலும், அந்த நீதிமன்ற ஆணையரின் அறிக்கையானது உரிய காரணங்களுடன் நீக்கரவு (Scrap) செய்யப்படாத நிலையில், இரண்டாவதாக நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்ய இயலாது. மேலும், இதன் அசல் வழக்கின் விசாரணை நிலை மற்றும் இந்த மனுதாரர்/பிரதிவாதியால் தற்பொழுது தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு ஆகியவற்றினை ஒருமித்து பரிசீலனை செய்து பார்க்கும்பொழுது, இந்த மனுவானது எந்தவொரு அடிப்படையான காரணங்கள் இன்றி வழக்கு விசாரணை முடிவினை தாமதப்படுத்தும் வகையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. எனவே, இந்த மனுவானது தள்ளுபடி செய்வது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுகிறது.

PANDI MAHARAJA RAMAIAH

Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2025.11.06 16:51:34 +0530

மேற்காணும் பரிசீலனையின் அடிப்படையில், இந்த மனுவானது செலவுத் தொகையின்றி தள்ளுபடி செய்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்தரிடம் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்ட பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025 ஆண்டு நவம்பர் மாதம் 06ம் தேதி என்னால் அவையறியப் பகரப்பட்டது.

PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2025.11.06 16:51:39 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி
தாராபுரம்.

<u>**மனுதாரர் & எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி & சான்றாவணங்கள்**</u> **– இல்லை**

PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2025.11.06 16:51:54 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தாராபுரம்.

**Fair order**
I.A.No.6/2025
in
O.S.No.392/2015
06.11.2025
DMC, DPM